**மாவட்ட வன அலுவலர், தருமபுரி வனக்கோட்டம், தருமபுரி அவர்களின் செயல்முறைகள்**

வழங்குபவர் : **திரு. க. இராஜ்குமார்,**
**மாவட்ட வன அலுவலர்.**

செ.மு.ஆ.எண். 8360 / 2018 / ப1, நாள் 23-10-2019

**பொருள் :** பணியமைப்பு - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் Group - II A தேர்வு - வனத்துறைக்கு 2017-2018 ஆம் ஆண்டில் உதவியாளராக ஒதுக்கீடு - திரு.வி.லோகச்சந்திரன், உதவியாளர் பதவியில் மாவட்ட வன அலுவலகம், தருமபுரியில் 23-11-2018 முற்பகல் பணியில் சேர்ந்தது - பணி வரன்முறை செய்தல் - ஆணை வழங்குதல் - தொடர்பாக

**பார்வை :**

1) தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் குறிப்பாணை எண்.60211/PSD-D/2018, நாள். 01-11-2019.

2) முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், (துறைத் தலைவர்) சென்னை ந.க.எண். W1/ 37899/ 2018, நாள் 12-11-2018.

3) தலைமை வனப்பாதுகாவலர், தருமபுரி செ.மு.எண். 8774/ 2018/ பொ1, நாள் 23-11-2018.

4) மாவட்ட வன அலுவலர் தருமபுரி செயல்முறை ஆணை எண்.8360 / 2018 / ப1, நாள்.23-11-2018.

*****

பார்வை -1 ல் காணும் கடிதத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் ஒருங்கிணைந்த குடிமைப்பணி Group - II A (நேர்முக தேர்வு அல்லாதது) 2017-2018 ஆம் ஆண்டில் உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு பார்வை - 2ல் காணும் ஆணையின் படி தருமபுரி மண்டலத்திற்கு ஒதுக்கீடு பெற்று தருமபுரி வனக்கோட்டத்தில் பார்வை-4ல் கண்டுள்ள ஆணையின்படி அட்டவணையில் கண்டுள்ளவாறு தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 28-ன் படி பணியில் சேர்ந்த நாள் முதல் பணி வரன் முறை செய்தும், மூன்றாண்டு கால தொடர் பணிக்கு உட்பட்டு, இரண்டாண்டு காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளரின் பெயர் | பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன் முறைப்படுத்தப் பட்ட நாள் | தகுதி காண் பருவத்தில் வைக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|---|
| 1. | திரு.வி.லோகச்சந்திரன் | உதவியாளர் | 23-11-2018 | 23-11-2018 | 23-11-2018 |

மேற்காணும் பணியாளரின் பணியினை வரன் முறை செய்து வழங்கப்படும் ஆணையானது சென்னை உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடுக்கப்பட்டு நிலுவையிலுள்ள வழக்கின் மீது வழங்கப்படும் ஆணைக்குட்பட்டது என தெரிவிக்கப்படுகிறது.

ஓம். க. ராஜ்குமார்,
மாவட்ட வன அலுவலர்,
தருமபுரி வனக்கோட்டம்,
தருமபுரி.

பெறுநர்

திரு.வி.லோகச்சந்திரன்,
உதவியாளர்.
(தருமபுரி வனக்கோட்டம் மூலமாக)

நகல் : கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், தருமபுரி மண்டலம், தருமபுரி.
நகல் : பணி ஆணை கோப்பு

// உ.ந.உ.ப. //

கண்காணிப்பாளர். 23/10/19

23/10/19

U2/D/E1/2018/8360/2018 Asst posting